விநியோகிக்கின்ற உரிமையைக் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம் இதற்கிடையிலே நாமே தொழிற்சாலை துவங்க உத்தேசித்து விரைவில் உற்பத்தி துவங்க இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in view of the fact that many, many match factories are coming up as small-scale industries, whether this Government will think of curbing the production of big and giant match industries like Wimco with the help of the Central Government, just as they have limited it in the case of the mill cloth so that small-scale industries will prosper ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தீப்பெட்டி தொழிற்சாலையை சிறிய தொழில் வளர்ச்சியிலே அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கருத்து நல்ல கருத்து. இதை இந்த அரசும் விரும்புகிறது. ஆனால் விம்கோ தொழிற்சாலை வெளிநாட்டினருக்கு உரிமையான தொழிற்சாலையாதலால், இதைப்பற்றி மத்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும்.

Collection of Agricultural Income Tax.

* 176 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the steps taken to intensify the collection of and to check evasion of Agricultural Income-tax in this State ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

Visit of working group on Land Reforms to Madras.

* 177 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the working group on Land Reforms set up by the National Agricultural Commission has visited Madras during 1973 ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்தக் கமிஷன் சென்னைக்கு விஜயம் செய்து நம்முடைய குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், குத்தகை பதிவுச் சட்டம் போன்ற சட்டங்களைப் பரிசிலனை செய்ததா ? அப்படியானால் அதில் குறைபாடு இருக்கிறது என்று அறிக்கை விட்டார்களா ?

@ 119-125-ம் பக்கங்களில் 3-ஆம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த கமிஷன், 'நேஷனல் கமிஷன் ஆன் அக்ரிகல்சர்', மத்திய அரசால் நியமிக்கப்பட்டது. இந்த கமிஷன் சென்னைக்கு வந்ததா என்பது கேள்வி, வரவில்லை என்று பதில் சொன்னேன். இந்த கமிஷன் மூலம் 'லேண்ட் ரிஃபார்ம்ஸ் அண்ட் அக்ரிகல்சரல் ப்ரொடக்ஷன்' பற்றி 'ஓர்க்கிங் குரூப்' 'ஃபார்ம்' செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் 'கொஸ்டினியர்' அனுப்பி, அரசாங்கத்தின் பதிலை அனுப்பியிருக்கிறோம்.

இனாம் நில விவசாயிகள்

*178 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் நோட்டிபை செய்யப்பட்ட இனாம் நிலங்களில் உள்ள விவசாயிகளிடமிருந்து அந்த இனாம்தார்கள் மாற்று அடையோலை போடுவதும் மேல்வாரம் வசூலிப்பதும் குறித்து எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 26/1963 அறிவிக்கப்பட்ட தேதி முதற்கொண்டு எஸ்டேட் முழுவதும் அரசுக்கு மாற்றப்பட்டு எவ்வித வில்லங்கமுமின்றி அதன் உரிமை அரசிடம் நிலைபெற்றதாகிவிடும். அறிவிக்கப்பட்ட தேதிக்கு பிறகு இனாம் எஸ்டேட்டுகள் நீக்குதல் சட்டத்தின் விதித் துறைகளின்படி அரசால் மேற்கொள்ளப்பட்ட அறிவிக்கப்பட்ட எஸ்டேட்டைப் பொறுத்தவரை மேல்வாரம் (குத்தகை) வசூலிக்க நில உடைமையாளருக்கு உரிமையில்லை. தகுதி வாய்ந்த நீதிமன்றம் அல்லது அதிகாரமன்றம் ஒன்றினால் அத்தகைய அறிவிப்புக்கும், எஸ்டேட்டை அரசு மேற்கொண்டதற்கும் தடை ஆணை விதிக்கப்பட்டால் அந்த எஸ்டேட் தொடர்ந்து நில உடைமையாளரின் பொறுப்பில் இருக்கும். இந்நிலையில் நில உடைமையாளர் தனக்குச் சேரவேண்டிய மேல்வாரம் (குத்தகை) வசூலிப்பதைத் தடுக்க இயலாது.

குத்தகைகாரர்கள் (பயிரிடும் குத்தகைக்காரர்கள்) உரிய தேதியில் குத்தகையைச் செலுத்தத் தவறினால் அக்குத்தகைக்காரர்களை வெளியேற்ற தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தகுதியான அதிகார மன்றத்திடம் நில உடைமையாளர் விண்ணப்பித்துக் கொள்ளலாம். இங்கு அவருக்குப் பாதகமான தீர்ப்பு கூறப்பட்டால் நில உரிமையைத் திரும்பப் பெறுவதற்காக பொருத்தமான மேல் முறையீட்டு அதிகாரமன்றத்திடம் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டும்.